மற்ற மாநிலங்களில் மின்சார கட்டணம் அதிகம்

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க மறுக்கும் கவர்னரின் நடவடிக்கை: நீதிமன்றத்தை நாட சட்ட வல்லுனர்களுடன் ஆலோசனை

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேட்டி

சென்னை, ஜூன்.10–

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கவர்னர் மறுத்து வருவது தொடர்பாக நீதிமன்றத்தை நாட சட்ட வல்லுனர்களுடன் பேசி வருகிறோம் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

டெல்டா மக்களின் உரிமைகளை விட்டு கொடுக்காத அரசாக தி.மு.க. அரசு தொடர்ந்து செயல்படும். நீர்வளத்துறை மூலம் காவிரி டெல்டா பகுதிகளின் கால்வாய்களை தூர்வாருவதற்கு இந்த ஆண்டு 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி சேலம், நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கடலூர், மயிலாடுதுறை, திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 4 ஆயிரத்து 773 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளும் இன்னும் சில நாட்களில் முழுமையாக முடிக்கப்படும் என்றார்.

இதைத்தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு மு.க.ஸ்டாலின் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: கர்நாடகாவில் புதிதாக அமைந்த அரசு, மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்ற முனைப்பில் இருக்கிறார்கள், இது சம்பந்தமாக நீங்கள் அந்த முதலமைச்சருடன் பேசி சுமுக தீர்வு காண்பதற்கு முயற்சி செய்கிறீர்களா?

பதில்: புதிதாக வந்திருக்கிற காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த ஆட்சிகளும் இதையே தான் தொடர்ந்து சொல்லி கொண்டிருந்தார்கள். அப்போதும் நாம் எதிர்ப்பு தெரிவித்து வந்தோம். அதே நிலையில் தான் தற்போதும் இருந்து வருகிறோம்.

கேள்வி: கவர்னர் இன்னும் பல மசோதாக்களுக்கு அனுமதி கொடுக்காமலே இருக்கிறார். இது சம்பந்தமாக தெலுங்கானா அரசு கூட கவர்னரை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் சென்றார்கள். அதுபோன்று ஏதாவது…

பதில்: நாங்களும் நீதிமன்றத்தை நாடலாமா என்று சட்ட வல்லுனர்களோடு கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம்.

கேள்வி: கவர்னரை மாற்றுவதற்கு ஏதாவது கோரிக்கை வைப்பீர்களா?

பதில்: நாங்கள் நினைப்பது எல்லாம் நடந்தால் இந்த பிரச்சினையே இல்லை.

பல்கலைக்கழகத்துக்கு கருணாநிதி பெயர்

கேள்வி: கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை பல்கலைக்கழகத்திற்கு கருணாநிதி பெயர் சூட்டப்படுமா?

பதில்: நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும். இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு வைக்கலாமா? அல்லது புதிதாக உருவாக்கப்படக்கூடிய பல்கலைக் கழகத்திற்கு வைக்கலாமா? என்பதை பரிசீலித்து முடிவு செய்வோம்.

கேள்வி: தமிழ்நாட்டில் முக்கியமான பல்கலைக்கழகங்களில் 2 வருடங்களாக பட்டம் தராமல் இருக்கிறார்கள், அதற்கு முக்கிய காரணம் கவர்னர் தான் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே?

பதில்: ஏற்கனவே உயர்கல்வித்துறை அமைச்சர் தெளிவாக சொல்லியிருக்கிறார். திரும்பவும் நான் அழுத்தமாக சொல்கிறேன். உண்மை தான் அது.

கேள்வி: விரைவாக அவர்கள் பட்டம் பெற அரசு சார்பில் ஏதாவது முயற்சி செய்யப்படுமா?

பதில்: அதற்குத்தான் பல்கலைக்கழக வேந்தர்களாக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று நாங்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறோம்.

அமைச்சரவையில் மாற்றமா?

கேள்வி: டாஸ்மாக் கடைகளை குறைக்கும் எண்ணம் ஏதும் இருக்கிறதா?

பதில்: இந்த ஆண்டு 500 கடைகளை குறைப்பதாக அறிவித்திருக்கிறோம்.

கேள்வி: அமைச்சரவையில் மாற்றம் இருக்க வாய்ப்பிருக்கிறதா?

பதில்: ஒன்றியத்தில் தான் அமைச்சரவை மாற்றம் வரும் என சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: நீர்நிலைகளை நன்றாக தூர்வாரியிருக்கிறீர்கள், சில இடங்களில் கழிவு கலக்கிறது, அவற்றை சுத்தம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா?

பதில்: அதையும் கூடுமானவரை முயற்சி செய்து தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏதேனும் புகார் இருந்தால் சொல்லுங்கள், அதையும் கவனிக்கிறோம்.

வீட்டு மின்கட்டணம் உயர்த்தப்படாது

கேள்வி: வணிக மின்கட்டணம் உயர்வினால் வணிகம் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்து இருக்கிறது, அதைக் குறைப்பதற்கு…

பதில்: திட்டமிட்டு பொய் பிரச்சாரம் செய்யப்படுகிறது. வீட்டு இணைப்பை பொறுத்தவரை, அவர்களுக்கு மின்கட்டணத்தை எந்த காரணம் கொண்டும் உயர்த்த மாட்டோம் என்று உறுதியாக சொல்லிவிட்டோம். அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாக சொல்லியிருக்கிறோம். வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு இலவச மின்சார சலுகைகளும் அப்படியே தொடரப்போகிறது.

ஒன்றிய அரசின் விதிமுறைப்படி பார்த்தீர்கள் என்றால், 4.7 சதவீத கட்டணம் அதிகரிக்க வேண்டும். ஆனால், 2.18 சதவீதமாக குறைத்து அந்த தொகையையும் மானியமாக தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு மின்வாரியத்திற்கு தருவதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே வீட்டு இணைப்புகளை பொறுத்தவரைக்கும் எந்தவிதமான கட்டண உயர்வும் நிச்சயமாக இருக்காது.

மற்ற மாநிலங்களில் அதிகம்

வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் 13 பைசாவில் இருந்து 21 பைசா வரை உயர்வு இருக்கும். மற்ற மாநிலங்களில் பார்த்தீர்கள் இதைவிட அதிகம். அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது மின்கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டது. மின்வாரியத்தை கடனில் மூழ்கடித்துவிட்டு போய்விட்டார்கள். ஜெயலலிதா ஆஸ்பத்திரியில் இருந்தபோது, உதய் திட்டத்தில் கையெழுத்திட்டது அண்ணா தி.மு.க. ஆட்சி. அதனால்தான், இந்த கோளாறு எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இது தான் உண்மை.

உறுதியாக இருக்கிறோம்

கேள்வி: அமுல் நிறுவனம் தமிழ்நாட்டில் வருவதை தடுப்பதாக சொன்னீர்கள். அது பற்றி தங்கள் கருத்து…

பதில்: அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

கேள்வி: ஆவின் பாலில் கலப்படம் செய்கிறார்கள் என்று கூறுகிறார்களே?

பதில்: அது தவறான செய்தி. இதை அன்றைக்கே அமைச்சர் மறுத்து விட்டார். திட்டமிட்டு பொய் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆதாரத்தை போலியாக தயார் செய்து போடுகிறார்களே தவிர, அது உண்மை இல்லை.

கேள்வி: நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி கொண்டிருக்கிறது. உங்களுடைய ஆயத்த பணிகளை தொடங்கி விட்டீர்களா? புதிதாக ஏதாவது கூட்டணிக் கட்சிகள்? நீங்கள் அதில் கலந்து கொள்ளப்போகிறீர்களா?

பதில்: வருகிற 23ந்தேதி பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் ஒரு கூட்டத்தை கூட்டியிருக்கிறார், அதில் முடிவெடுக்கப்படும். நான், அதில் கலந்து கொள்ளப்போகிறேன்.

தமிழ்நாட்டில் நேற்று 5 பேருக்கு கொரோனா

சென்னை, ஜூன்.10

தமிழ்நாட்டில் நேற்று 5 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர்.

கோவை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தலா 2 பேருக்கும், சேலத்தில் ஒருவருக்கும் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது. இவர்களில் 2 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் ஆவர். சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 23 ஆக உள்ளது. நேற்று கொரோனா பாதிப்பில் இருந்து 5 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். நேற்று தமிழ்நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

சென்னை தங்கசாலையில் ஏகாம்பரேசுவரர், தர்மராஜா கோவிலுக்கு சொந்தமான ரூ.6½ கோடி சொத்து மீட்பு

இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை

பெரம்பூர், ஜூன்.10–

சென்னை தங்கசாலையில் ஏகாம்பரேசுவரர், தர்மராஜா கோவிலுக்கு சொந்தமான ரூ.6□ கோடி சொத்துகள் மீட்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு சொந்த மான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை தங்கசாலை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் கோவிலுக்கு சொந்தமான 1,500 சதுரடி பரப்பிலான கட்டிடங்கள் மற்றும் மின்ட் தெருவில் உள்ள அருள்மிகு தர்மராஜா கோவிலுக்கு சொந்தமான 1,015 சதுரடி பரப்பிலான கட்டிடங்கள் 11 நபர்களுக்கு வணிக பயன்பாட்டுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

இவர்கள் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமல் நிலுவை வைத்திருந்ததால் சட்டப்பிரிவு 78ன்படி இந்து சமய அறநிலையத்துறையின் சென்னை மண்டல இணை கமிஷனரின் உத்தரவின்படி, உதவி கமிஷனர் எம்.பாஸ்கரன் முன்னிலையில் போலீசார் மற்றும் வருவாயத்துறை அதிகாரிகள் உதவியுடன் இந்த சொத்து மீட்கப்பட்டு கோவில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.6□ கோடி ஆகும்.

திருச்சியில் 100 நாள் வேலை திட்ட பெண்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாடினார்

திருச்சி, ஜூன்.10–

திருச்சியில் 100 நாள் வேலை திட்ட பெண்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாடினார். அப்போது, கூலி எவ்வளவு கிடைக்கிறது? எத்தனை நாட்கள் வேலை செய்கிறீர்கள்? என்று அந்த பெண்களுடன் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சியாக உரையாடினார்.

திருச்சியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது, லால்குடி அருகே உள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கால்வாய் வெட்டும் பணிகளை செய்துகொண்டிருந்த பெண்களிடம் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார். அப்போது, முதலாவதாக அந்த பெண்களிடம் மு.க.ஸ்டாலின் ஊர் பெயரை கேட்டார். அதற்கு பெண்கள் தங்களுடைய ஊர் பெயர் ஆலங்குடி என்று கூறினார்கள்.

தொடர்ந்து, 100 நாள் வேலை திட்ட பெண்களிடம், மு.க.ஸ்டாலின் உரையாடினார். அதன் விவரம் வருமாறு:

மு.க.ஸ்டாலின் கேள்வி: கூலி, சம்பளம் எல்லாம் எப்படி கிடைக்கிறது?

பெண்கள் பதில்: ரூ.285 கொடுக்கிறார்கள்.

மு.க.ஸ்டாலின்: பணம் எப்படி கொடுக்கிறார்கள்? வங்கி மூலம் கொடுக்கிறார்களா?

பெண்கள்: வங்கி மூலமாக வருகிறது.

மு.க.ஸ்டாலின்: எத்தனை நாட்கள் வேலை செய்கிறீர்கள்?

பெண்கள்: 100 நாட்கள் வேலை செய்கிறோம் சார்.

பெண்கள்: உங்களை இதுவரை நேரில் பார்த்ததே இல்லை சார். இப்போது, உங்களை பார்த்ததில் ரொம்ப சந்தோசம். சாமியை பார்த்த மாதிரி இருக்கிறது.

மு.க.ஸ்டாலின்: ஆட்சி திருப்தியாக இருக்கிறதா?

பெண்கள்: ரொம்ப சந்தோசமாக இருக்குது சார்.

மு.க.ஸ்டாலின்: ஏதாவது குறை இருந்தால் சொல்லுங்கள்.

பெண்கள்: குறை எதுவும் இல்லை. நினைத்ததை நிறைவேற்றிவிட்டீர்கள் சார். மிகவும் சந்தோசம். சொன்னதை எல்லாம் செய்துகொண்டிருக்கிறீர்கள்.

மு.க.ஸ்டாலின்: எத்தனை பேர் இங்கு வேலை செய்கிறீர்கள்?

பெண்கள்: 75 பேர் வேலை செய்கிறோம்.

மு.க.ஸ்டாலின்: இந்த வேலையை எத்தனை நாளாக செய்கிறீர்கள்?

பெண்கள்: இன்று (நேற்று) முதல் செய்கிறோம்.

மு.க.ஸ்டாலின்: சரிம்மா, சந்தோசம்., வரட்டுமா….

இவ்வாறு உரையாடல் நடந்தது.

இதையடுத்து, பள்ளி சென்று திரும்புவதற்கு மாணவர்களுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் தங்களது கிராமங்களில் பஸ் வசதி இல்லை, வீடு கட்டுவதற்கு இட வசதி தரவேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை அந்த பெண்கள் உள்பட விவசாய தொழிலாளர்கள் மு.க.ஸ்டாலினிடம் முன்வைத்தனர். அந்த கோரிக்கைகளை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்துவிட்டு, நிறைவேற்றி தருவதாக மு.க.ஸ்டாலின் உறுதி அளித்தார்.

யு குரோ கேபிடல் லிமிடெட்
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 (''சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் கீழ்

யு குரோ கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழே கையொப்பமிட்டவர் சட்டப்பிரிவு 13(2) மற்றும் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பி, அந்தந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடன்தாரர்களை கேட்டுக் கொண்டார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பின் சேவையைத் தவிர்க்கிறார்கள் என்று கீழ்க்கையொப்பமிடப்பட்டவர் நம்புகிறார், எனவே விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பினை ஒட்டுதல் மற்றும் வெளியீடு மூலம் செயல்படுத்தப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகளின் விவரம்
கடன்தாரர்(கள்) பெயர் வெப் நெட்வொர்க்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட். 2) கௌரிசங்கர் நமசிவாயம் 3) ரமேசன் பிரபா வினோத் கடன் கணக்கு(கள்): HCFCHESEC000010 20856 HCFCHESEC000010 17604	கோரிக்கை அறிவிப்பு தேதி : 31.05.2023 31.05.2023 அன்று ரூ.1,30,80,949/–	சொத்து 1: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: பண்ணை எண். 56பி, ச.எண். 1454/2B, பட்டாப்படி புதிய ச.எண். 1454/2B1A3 விஸ்தீரணம் 17.3 சென்ட் (7560 சதுர அடி), கேளம்பாக்கம், தையூர் கிராமத்தில் நந்தவனம் தோட்டத்தில் அமைந்துள்ளது, செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம்; திருப்போரூர் சார் பதிவு மாவட்டம், செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : வடக்கில் : பண் எண்.56–ஏ, தெற்கில் 16 அடி அகல பாதை, கிழக்கில் : பண்ணை எண்.55, மேற்கில் : 20 அடி பாதை, விஸ்தீரணம் கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 120 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 120 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 63 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 63 அடி, சொத்து 2 : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் நிலம் மற்றும் கட்டிடம்: ச.எண். 273/2, 274/2, 275/16, 275/213, 276/29, 28612B, 2C, 285/1, 285/2, 289/1 மற்றும் 289/2, பழைய ச.எண். 273,274, 275/1, 275/2, 276/2, 286/2, விஸ்தீரணம் 1018 சதுர அடி. பிரிவுபடாத பங்கு நிலம் 418050 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் மற்றும் பிளாட் எண்.எப்4, முதல் தளம், பில்ட் ஏரியா 1785 சதுர அடி, இந்த சொத்தானது 'விஜினன் மினர்வா' நொளம்பூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. அதன் எல்லைகள் : வடக்கில்: சர்வே எண்.253, தெற்கில் : சர்வே எண்.181 முதல் 186 வரை, கிழக்கில் : சர்வே எண்.272/2, 277 மற்றும் வி.என். தேவதாசுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : சர்வே எண்.290.

கோரிக்கை அறிவிப்புகளுக்கு இணங்கி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைத் தொகையை, இந்த வெளியீடு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள், பணம் செலுத்தப்படும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி, தாமதமாக செலுத்தும் அபராதம், பவுன்ஸ் கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றுடன் செலுத்துமாறு கடன்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பான கடனாளர் என்பதையும், கடன்தாரர்களால் பெறப்படும் கடன் வசதி என்பது யு குரோ கேபிடல் லிமிடெட்டில் கடன்தாரரால் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் என்பதையும் கடன்தாரர்(கள்) கவனித்தில் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளை முழுமையாகச் செலுத்தத் தவறினால், கடன்தாரர்களின் கடன் கணக்கில் நிலுவைத் தொகையை பெறுவதற்காக, சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் கீழ் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தீர்வாக விற்பனை செய்வதன் மூலம் அல்லது மாற்றுவது உட்பட பாதுகாப்பான சொத்தை சுவாதீனம் செய்ய சட்டப் பிரிவு 13(4)ன் கீழ் அனைத்து உரிமைகளையும் பயன்படுத்த யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உண்டு. விற்பனை அல்லது பரிமாற்ற உரிமையைச் செயல்படுத்துவதற்கு முன், பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை இணைக்க மற்றும்/அல்லது சீல் செய்ய யு குரோ கேபிடல் லிமிடெட் அதிகாரம் பெற்றுள்ளது. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனைக்குப் பிறகு, யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை ஈடுகட்ட, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு போதுமானதாக இல்லாவிட்டால், மீதி பாக்கி தொகையை மீட்டெடுப்பதற்கு தனியான சட்ட நடவடிக்கைகளை தொடங்க யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது. யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்கு வேறு எந்த சட்டத்தின் கீழும் கிடைக்கும் மற்ற எல்லா தீர்வுகளுக்கும் கூடுதலாகவும் சுயாதீனமாகவும் இந்த தீர்வு உள்ளது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு சட்டப்பிரிவு 13(13)ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது. யு குரோ கேபிடல் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் கடன்தாரர்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் (சாதாரண வணிகத்தைத் தவிர) பாதுகாப்பான சொத்துக்களை மாற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது மற்றும் மேலும் மேற்கூறியவற்றை பின்பற்றாதது சட்டப்பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்புகளின் நகல் கீழே கையொப்பமிட்டவர்களிடம் உள்ளது மற்றும் கடன்தாரர்கள் விரும்பினால் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்/–
அதுல் பதக் (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக

தேதி: 10.06.2023
இடம்: சென்னை

பெயர் மாற்றம்

2/6, பிளாட் எண்.3A, Ceebros Anugraha, 5வது தெரு, நந்தனம் விரிவு, சென்னை–ல் வசிக்கும் Barath Krishnan, ஆகிய நான், 05.02.2008ல் பிறந்த எனது மகன் VYAS KRISHNAN–இனி VYAS B KRISHNAN என்று அழைக்கப்படுவான்.

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சமூகம், திருத்தணி

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், அத்திமாஞ்சேரி கிராமம், காப்பு வீதி, விலாசம் கொண்ட வீட்டில் வசிக்கும் மனுதாரர் திரு. அசோக் குன்ராஜ்குப்பம் த/பெ. சாம்பசிவ ஆச்சாரி குன்ராஜ்குப்பம் என்பவர் கடந்த 10.01.1965ம் தேதி அவரது வீட்டில் பிறந்ததாக காலதாமதமாக மனு செய்துள்ளார். இதில்,எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினத்திற்குள் திருத்தணி கோட்டாட்சியர், பள்ளி பட்டு வட்டாட்சியர், பொதட்டூர் பேட்டை வருவாய் ஆய்வாளர் ஆகி யோரிடம் எழுத்து பூர்வமாக சமர்பிக்க வேண்டியது.தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு பிறப்புச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ராமு
வருவாய் ஆய்வாளர்
பொதட்டூர்பேட்டை

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098.
Tel: 022-6741 2314, Fax: 022- 6741 2313 CIN: U67190MH2007PTC168303
Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி பேங்க் என்ஏ, ஒப்பந்தத்தின்படி போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடனை ஒதுக்கியுள்ளது. ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 27.09.2022 அன்று போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய்13–2 திட்டம் B–ன் டிரஸ்டியாக செயல்படுகிறார்) (PARC) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான மெசர்ஸ் திரு. பஷீர் பாஷா ஆர், திருமதி சகிலா பஷீர், கடன் கணக்கு எண்: 14991295–ன் கீழ் 5.6.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.53,28,643/–(ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து இருபத்தெட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் 6.6.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 20.07.2023 அன்று நண்பகல் 12.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும் குறைந்தபட்ச விலை: ரூ.12,30,000/– (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.1,23,000/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 19.07.2023 அன்று மாலை 7.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: 2250 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு நிலம் 375 சதுர அடி மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். மற்றும் ப்ளாட் எண்.டி, முதல் தளம், பிளிந்த் பகுதி 720 சதுர அடி, (பொதுவான பகுதி உள்ளடக்கி) ''மனை எண்.43, ஸ்ரீ விஜயலட்சுமி அவென்யூ", கொளத்துவாஞ்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண். 61/4, 60/1, (ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதி எண்.8802ஆல் அங்கீகரிக்கப்பட்டது. டி.டிஸ் எண்.589/04/As, தேதி: 3–5–2004, உறுப்பினர் செயலாளர் சிஎம்டிஏ, சென்னை, கமிஷனர் பஞ்சாயத்து யூனியன்,(குன்றத்தூர் மற்றும் படப்பை), சைதாப்பேட்டை இணை–I துணை பதிவு மாவட்டம் மற்றும் தென்சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிஷேன் (+91 9941016600), திரு. ஷ்யாம் நம்பூரி (+91 9677288418), திரு. குர்பால் சிங் (+91 8976898212) மற்றும் திரு. ராஜேந்தர் தாஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://phoenixarc.co.in?p=3998 and /or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை **போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக**
தேதி: 10.06.2023 **(போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 13–2 ஸ்கீம் B–ன் டிரஸ்டியாக செயல்படுகிறார்)**

படிவம் ஏ

பொது அறிவிப்பு

(திவால் நிலை மற்றும் இந்திய திவால் வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6 - ன் கீழ்)

சன் பயோ நேச்சுரல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

	தொடர்புடைய விவரங்கள்	
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	**சன் பயோ நேச்சுரல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்**
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	14/10/2014
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	கம்பெனிகள் பதிவாளர் – சென்னை
4.	கார்ப்பரேட் அடையாள எண்/ கார்ப்பரேட் கடனாளரின் வரம்பிற்குட்பட்ட அடையாள எண்	U74900TN2014PTC097698
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்)	பி.எண்: சூப்பர் – 7, திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி, சென்னை – 600032,
6.	கார்ப்பரேட் கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	06.06.2023 சிஐஆர்பி உத்தரவு பெறப்பட்ட தேதி:07.06.2023
7.	திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி	04.12.2023
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**சாயா குப்தா** Regd. No.IBBI/IPA-002/IP-N00984/2020-2021/13133
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: 1, பீமா நகர், 202, அல்மாஸ் ட்ரீம்ஸ் அபார்ட்மெண்ட், ஆனந்த் பஜார் அருகில், இந்தூர்452018, மத்தியப் பிரதேசம் மின்னஞ்சல்: guptachayacs@gmail.com
10.	தொடர்புக்கான இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி:911, அப்பல்லோ பிரீமியர், விஜய் நகர் சதுக்கம் அருகில், இந்தூர் – 452010, மத்தியப்பிரதேசம் மின்னஞ்சல்:cirp.sbnipl@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	21/06/2023
12.	பிரிவு 21, உப பிரிவு (6ஏ), உட்கூறு (பி)ன் கீழ் கடன் வழங்கியவர்கள் வகை, வேறு ஏதேனும் இருப்பின் இடைக்கால தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்டது	பொருந்தாது
13.	வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்	இணைய இணைப்பு: https://www.ibbi.gov.in/home/downloads

06.06.2023 (உத்தரவு 07.06.2023 அன்று பெறப்பட்டது) அன்று **சன் பயோ நேச்சுரல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின்** கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறையை துவங்க தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

சன் பயோ நேச்சுரல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரிக்கு தங்கள் கோரிக்கைகளை ஆதாரத்துடன் 21.06.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது கோரிக்கைகளை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

சாயா குப்தா
இடைக்கால தீர்மான நிபுணர்
09.06.2023 IBBI/IPA-002/IP-N00984/2020-2021/13133
சென்னை **சன் பயோ நேச்சுரல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்**

பொது அறிவிப்பு

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், திருமதி.R.கீதா (வயது 58) கணவர் பெயர் D.ராதாகிருஷ்ணராஜா, க.எண்.14, தேவிஸ்ரீ டவர்ஸ், கிரவுண்ட் ப்ளோர், நியூ நடராஜபுரம், MMDA காலனி அரும்பாக்கம், சென்னை – 600 106, ***(ஆதார் எண். 2875 9179 4420).*** *எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் பெயரில் உள்ள சொத்திற்கான பாகப்பத்திரத்தின் நகல்* ***(பாகப்பத்திரம் எண்.2877/1984)*** *விருதுநகர் மாவட்டம், ராஜாபளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த மேற்படி நகல் பாகப்பத்திரம் கடந்த* ***07.06.2023*** *அன்று கீழ்பாக்கம் EVR சாலையில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது காணாமல் போய்விட்டது. இதனை எங்கு தேடியும் கிடைக்கபெறவில்லை. யாரேனும் கிடைக்கப்பெற்றால் மேலே கண்ட எனது விலாசத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

R.கீதா
செல் நம்பர் :99443 87350

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரரான திரு. G.தயாளன், த/பெ.கஜேந்திரன் வயது 43, எண்.91, பாரதி தெரு, கோவர்த்தனகிரி, ஆவடி, சென்னை600 071 என்ற முகவரியில் வசித்து வருகிறார். "ஸ்ரீ லட்சுமி ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறார். மேற்கண்ட நிறுவனத்திற்கு சொந்தமான கீழ்கண்ட அசல் ஆவணங்களை, 22.5.23 மாலை 6.00 மணியளவில் ஆவடி பேருந்து நிலையம் அருகில் xerox எடுத்து விட்டு அவரது இரு சக்கர வாகனத்தில் ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பார்க்கும் பொழுது மேற்படி அசல் ஆவணங்களை காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்க வில்லை. ஆயல்சேரி கிராமம், சர்வே எண்கள்.235/2–ல் அடங்கிய ஏக்கர் 1.70 செண்ட், 235/3–ல் அடங்கிய ஏக்கர் 0.84 செண்ட், 236/3ல் அடங்கிய ஏக்கர் 2.00 செண்ட் மற்றும் 236/4ல் அடங்கிய ஏக்கர் 0.89 செண்ட் ஆக மொத்தம் ஏக்கர் 5.43 செண்ட் நிலம் சம்மந்தப்பட்ட பவர் பத்திர எண்.3791/2006 ஆவணம், ஈடுகட்டிய அடமான பத்திர எண்.2651/2006 ஆவணம், பவர் பத்திர எண்.2939/2013 ஆவணம், இரசீது ஆவண எண்.3252/2013 ஆவணம், பவர் இரத்து பத்திர எண்.8990/2013 ஆவணம், விக்கிரைய ஒப்பந்தப் பத்திர எண்.3404/2014 ஆவணம், கிரைய ஒப்பந்த இரத்து பத்திர எண்.1980/2015.

M.CHINNA DURAI, Advocate
No.11/12, Jai Bairavi Appts, JP Nagar, 1st Street,
Surapet, Chennai - 600 066.
Mobile No-9962605490

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்:27BKC,C–27,G–பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: எண்.185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டினால் (பிஎச்எப்எல்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (கேஎம்பிஎல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 07.03.2023 சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திரு. ராஜா என், ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 403TOL90558152 & 403TOL90569767 & 403HSO90445752ன்கீழ் 6.06.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.47,11,458/–(ரூபாய் நாற்பத்தேழு லட்சத்து பதினோராயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) மற்றும் 7.06.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 20.07.2023 நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 19.07.2023 அன்று மாலை 06.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

தபால் முகவரி : கதவு எண்.113, கட்டபொம்மன் 7வது தெரு, ஜிகேஎம் காலனி, பெரம்பூர், சென்னை – 600 082, மேலும் : எண்.8/122, ஸ்ரீதரன் தெரு, பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ் ரெயில்வே நிலையம், ஜிகேஎம் ஒர்க்ஸ், சென்னை – 600 082, மேலும் 45ஏ, ஆனந்தன் 3வது தெரு, ஜிகேஎம் காலனி, சென்னை, ஜவகர் நகர், சென்னை, தமிழ்நாடு – 600 082.

சொத்து விவரம்: ப்ளாட் எண்.ஜி2ல் உள்ள குடியிருப்பு ப்ளாட் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். தரை தளம், (மனை எண். 2பி) 700 சதுர அடியில் சூப்பர் கட்டிட ஏரியாவை கொண்டது. வீட்டு மனை எண். 2, விஸ்தீரணம் 2400 சதுர அடி. சர்வே எண். 664/1a, அனுமதியின்படி மனை எண். 2a மற்றும் மனை எண். 2b என பிரிக்கப்பட்டது, மனை எண். 2a–ன்படி, திட்டமிடல் அனுமதி எண். 396/15/F2 தேதி 03.07.2015 மற்றும் கட்டிட அனுமதி எண். 334/15/F2, (B.A No. 260/15/F2 தேதி 13.04.2015) தேதி 03.07.2015 பிளாட் எண். 2b–ன்படி, திட்டமிடல் அனுமதி எண். 396/15/F2 தேதி 396/15/F2 மற்றும் கட்டிட அனுமதி எண். 336/15/F2 (B.A எண். 260/15/F2 தேதி 13.04.2015) தேதி 03.07.2015 ஆவடி நகராட்சி 2வது குறுக்கு, 8வது தெரு, வைஷ்ணவி நகர், சென்னை 600109, எண்.16 திருமுல்லைவாயல் கிராமம், ஆவடி தாலுக்கா (முந்தைய அம்பத்தூர் தாலுக்கா) திருவள்ளூர் மாவட்டம். இந்த சொத்து ஆவடி சிறப்பு தர நகராட்சி வரம்பிற்குள் உள்ளது. 2400 சதுர அடி நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 313 சதுர அடி. அம்பத்தூர் துணைப் பதிவு மாவட்டம், சென்னை பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு: சர்வே எண். 664/1aல் உள்ள மனை மற்றும் வீடு, தெற்கு: 20 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 3, மேற்கு: மனை எண். 1.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. குர்பால் சிங் (+91 8976898212), திரு. ஷ்யாம் நம்பூரி (+91 9677288418) மற்றும் மற்றும் திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 10.06.2023 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்
ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்–636 302.
PHONE: 0427-2345425 EMAIL: tmsml@ymail.com
WEBSITE: https://www.thambbimodern.com/
CIN:L17111TZ1977PLC000776

காணொலி காட்சி (VC)/இதர ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் நடைபெறும் 45வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி

45வது வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தினால் (எம்சிஏ) வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் பொது சுற்றறிக்கை எண்கள் 14/2020, 17/2020, 02/2021, 19/2021, 21/2021, 21/2021 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (செபி) வெளியிட்ட சுற்றறிக்கை எண்கள் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 மற்றும் SEBI/HO/CFD/POD-2/P/CIR/2023/4 (இனிமேல் கூட்டாக "" சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படும்), மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015ன்படி தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டின் 45வது வருடாந்திர பொதுக்கூட்டம் ('ஏஜிஎம்') வெள்ளிக்கிழமை, ஜூலை 07, 2023 அன்று காலை 11.00 மணிக்கு காணொலி காட்சி /இதர ஒலி ஒளி சாதனங்கள் ('VC/OAVM') மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2022–23 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் 45வது வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவதற்கான அறிவிப்பு ஆகியவை நிறுவனம் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே அனுப்பப்படும். அறிவிப்புடன் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணையதளம் https://www.thambbimodern.com/மற்றும் பிஎஸ்இ இணையதளம் அதாவது www.bseindia.comல் கிடைக்கும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பங்குதாரர்கள் VC/ OVAM வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர்வதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும்.

தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள் பின்வருவனவற்றைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

- டிமேட் வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தமட்டில், பங்குதாரர்கள் தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் (DP(s)) பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்; மற்றும்
- காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை– (i) நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (ஆர்டிஏ) அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டுக்கு உறுப்பினரின் முகவரிக்கு ஆதரவாக போலியோ எண் விவரங்கள் மற்றும் பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகல், ஆதார்/ஓட்டுநர் உரிமம்/தேர்தல் அடையாள அட்டை/பாஸ்போர்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் ஆகியவற்றை கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், யூனிட்: தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், சுப்பிரமணியம் கட்டிடம் எண். 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை, தமிழ்நாடு–600002 என்ற முகவரிக்கு எழுதலாம் அல்லது (ii) cameo@cameoindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது (iii) மின்னணு முறையில் VC/OAVM போன்றவற்றின் மூலம் வருடாந்திர அறிக்கை, அறிவிப்பு, மின்னணு வாக்குப்பதிவுக்கான அறிவுறுத்தல் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது உள்ளிட்ட அனைத்து தகவல்தொடர்புகளையும் பெறுவதற்கு thambbimodern@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் நிறுவனத்தின் செயலகத் துறையைத் தொடர்புகொள்ளலாம்/எழுதலாம்.

டிமேட் படிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், 45வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2022–23 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையைப் பெறுவதற்கான வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய மேற்கூறிய இணைப்பைப் பயன்படுத்தலாம்.

கட் ஆப் தேதியில் உள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான வசதியை நிறுவனம் வழங்கும். VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர்வதற்கான வழிமுறைகள் மற்றும் மின்வாக்களிப்பு செயல்முறை (காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கலாம்) 45வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் ஒரு பகுதியாகும்.

எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: சேலம் **ஒப்பம்/– மோகன் உமா மகேஸ்வரி**
தேதி: 09.06.2023 **நிறுவனத்தின் செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி**